அந்த டாக்டர்மீது விசாரணை செய்யப்பட்டு அந்த இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு அவர் மாற்றப்பட்டிருக்கிறார். அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

Pupils of Vadapathimangalam Elementary School

* 291 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether a number of pupils suffered from food poison in the Vadapathimangalam Elementary School in Thanjavur District around 4th February 1970 after consuming the Midday Meal?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நச்சுணவினால் மாணவர் யாரும் பாதிக்கப்படவில்லை. எனினும் உணவில் பல்லி காணப்பட்டதாக மற்றொரு மாணவன் கூச்சலிட்டதன் விளைவாக, இரு மாணவர்கள் வாந்தி எடுத்தனர். அவ்வுணவு முற்றிலும் தவிர்க்கப்பட்டதுடன் எச்சரிக்கையாக எல்லா மாணவர்களுக்கும் மருத்துவமனையில் இரைப்பை துப்புரவு (stomach wash) செய்யப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 292, 293, 294, 295, 296 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

கோழிப் பண்ணைகளில் புதிய ஆராய்ச்சி

* 297 வினா.—திரு. எம். பூபதி : மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கோழிப்பண்ணைகளில் ஒவ்வொரு கோழியும் ஒரே நாளில் இரண்டு முட்டைகள் இடச்செய்யும் ஆராய்ச்சி நடத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், இதில் வெற்றி ஏதேனும் கிட்டியதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். பூபதி : நம்முடைய கோழிப் பண்ணைகள் நட்டத்தில் நடைபெறுவதாக மூடப்பட்டு வருகின்றனவே, ஆனால் ருஷ்யா, சீனா போன்ற நாடுகளில் பகல் போலவே இரவு நேரங்களிலும் விளக்குகளைப் பகல்போலப் போட்டு ஒரு நாளைக்கு இரண்டு தடவை இ,ரவும்கூட கொழிகள் முட்டையிடச்செய்கிறார்களே, நம் நாட்டிலும் அதைப்போல நம் மாநிலத்திலும் இரு முறை முட்டையிடும் முறையைக் கொண்டுவர அமைச்சர் தலைமையில் ஒரு குழுவைப்போட்டு வெளிநாடு சென்று அதைப் பரிசீலித்து வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது போன்ற தகவல் கிடையாது. குழு அமைக்கின்ற உத்தேசம் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : நம் மாநிலத்தில் கோழிப் பண்ணைகள் மூடப்பட்டு வருகின்றன. அதற்காகக் கட்டப்பட்ட கட்டடங்கள் வீணாகக் கிடக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கோழி இரண்டு முட்டையிடுவதைப் பற்றிய கேள்வி.

திரு. கே. என். குமாரசாமி: ஒரு முட்டையிடுவதற்குக்கூட வழியின்றி மூடிவிட்டார்களே என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கோழிப் பண்ணைகளை மூடிவிட்டார்கள் என்ற தவறான செய்தி பரப்படுகிறது. முன்பு கோழிப் பண்ணை என்று போர்டு இருக்கும். உள்ளே கோழியிருக்காது, முட்டையிருக்காது அதுபோன்ற இடங்களைத்தான் மூடினோம். இன்னும் தொடர்ந்து நட்டத்தில் இருந்துகொண்டிருந்த இடங்களை மூடி அங்கேயிருந்த குஞ்சுகளை வேறு இடங்களுக்கு அனுப்பியிருக்கிறோம்.

திரு. கே. ஆர். கோவிந்தன்: நம்முடைய கோழி முட்டைகளுக்கு வெளி நாடுகளில் கிராக்கி இருக்கிறதா? ஆம் எனில் அனுப்பப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏதேனும் அனுப்ப முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. கே. வினாயகம்: கோழிப் பண்ணை நடத்துவதில் அதிகமாகச் செலவு ஆகிறது. நம்முடைய உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கிற சம்பளத்தை எல்லாம் கணக்கிட்டுச் சராசரி பார்த்தால் ஒரு முட்டை 1¼ ரூபாய் ஆகிறது என்று முன்பு மாவட்ட கலெக்டர் அறிக்கை கொடுத்தார்களே, அதன் காரணமாகத்தான்—எக்கனாமிகலாக இல்லை என்று இந்த பவுல்ட்ரி பார்ம்கள் மூடப்பட்டுவிட்டனவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கோழிப்பண்ணை லாபகரமாக இருக்க அதிகமாக கோழிகள் இருந்தால்தான் முடியும். டாக்டர்களை எல்லாம் போட்டுச் சம்பளம் கொடுக்கிறபொது அப்போதுதான் பொருளாதாரத் துறையில் நட்டமில்லாதிருக்கும். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் பெரிய அளவில் கோழிப்பண்ணைகள் ஏற்படுத்த வேண்டுமென்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

Construction of Advocates' Chamber

* 298 *Q.*—Thiru T. MARTIN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any proposal for the construction of Advocates' Chamber sent by the High Court, Madras is pending construction in 1969 before the Public Works Department of Government of Tamil Nadu; and

(*b*) if so the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இச்செயற்குறிப்பு பரிசீலனையிலுள்ளது.

திரு. டி. மார்டின்: பொதுவாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு அறிஞர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இருந்து தொழில் செய்ய சேம்பர் வசதி இல்லாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அடிஷனல் சேம்பர் கட்டவேண்டுமென்று பலகாலமாக யோசனை இருந்து வருகிறதே, உடனடியாகக் கட்ட முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பலகாலமாக இருப்பது எனக்குத் தெரியாது. மே 1970 இல் தான் உயர்நீதி மன்றத்தில் இருந்து ஒன்பது லட்சத்து ஐம்பத்தாராயிரம் மதிப்பில் அடிஷனல் சேம்பர்ஸ் கட்ட ப்ரபோஸ் வந்திருக்கிறது. அது பரிசீலனையில் உள்ளது.